பொதுவிநியோகத் திட்டம் – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை திட்டங்கள் செயல்படுத்துவது தொடர்பாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்கள் அளிப்பது பற்றி உயர்மட்டக் குழு எடுத்த முடிவுகளின் மீது ஆணை.

---

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எப்1) துறை

அரசாணை (2டி) எண்.4 நாள் 31.01.2008

படிக்க:

செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை,
நேர்முக கடிதம் எண்.30462/சி1/2006–12, நாள் 9.11.2007.

**ஆணை**

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை திட்டங்கள் குறித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்களை அளிப்பது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரை தலைவராகக் கொண்ட உயர்மட்டக் குழு எடுத்த முடிவுகள் மீது தக்க நடவடிக்கை மேற்கொண்டு ஆணைகள் வெளியிடுமாறு ஊராட்சி மற்றும் உள்ளாட்சித் துறை செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை திட்டங்கள் செயல்படுத்துவது தொடர்பாக உள்ளாட்சித் துறைகளுக்கு மேலும் அதிகாரங்கள் அளிப்பது குறித்து அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:

1. தங்கள் எல்லைக்குட்பட்ட நியாயவிலைக் கடைகளை பஞ்சாயத்துத் தலைவர்கள் மேற்பார்வை செய்ய அதிகாரம் அளிக்கலாம்.

2. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வட்ட வழங்கல் அதிகாரிகளால் வட்ட அளவில் கூட்டம் நடத்தப்பட வேண்டும். அக்கூட்டங்களில் தங்கள் பொது விநியோகத் திட்டம் குறித்த குறைகளையும், ஆலோசனைகளையும் வழங்க பஞ்சாயத்து தலைவர்களை அழைக்க வேண்டும். கூட்டுறவுத் துணைப்பதிவாளர்களையும், பொது விநியோகத் திட்ட அலுவலர்களையும் கூட்டத்திற்கு அழைக்க வேண்டும்.

3. ஒவ்வொரு குடியரசு தினத்தன்றும் சேர்த்தல், நீக்கல் போன்ற எல்லா விவரங்களையும் கொண்ட புத்தம் புது நிலைக்குக் கொண்டு வரப்பட்ட ‘அ’ பதிவேட்டை கிராம சபை கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

4. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பயிர்க்கடன் பற்றிய விவரங்களையும், பயன்பெறுவோர் பட்டியலையும் கிராம சபைக்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

5. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையை பொறுத்தவரையில் தனியே கிராம அளவில் குழு அமைப்பதற்கு பதிலாக கிராம பஞ்சாயத்தே எல்லா திட்டங்களுக்கும் கிராம குழுவாக செயல்படும். கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தேவையானால் இக்குழுவுக்கு கூடுதலாக நபர்களை நியமனம் செய்யலாம்.

3. மேலே பக்கம் 1–3 பத்தி 2–ல் காணும் முடிவுகள் குறித்து அரசு நன்கு பரிசீலனை செய்தது. உயர்மட்டக் குழுவில் எடுக்கப்பட்ட முதல் நான்கு முடிவுகளை ஏற்றுக் கொண்டு, அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

4. ஐந்தாவது முடிவினையும் அரசு ஏற்று கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் தனியே கிராம அளவில் குழு அமைப்பபற்கு பதிலாக கிராம பஞ்சாயத்தே எல்லா திட்டங்களுக்கும் கிராம குழுவாக

செயல்படும் எனவும் கிராம சபையே இதற்கு போதுமானது என்பதால் இக்குழுவுக்கு கூடுதலாக நபர்களை நியமிக்க தேவையில்லை எனவும் ஆணை வெளியிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. சண்முகம்**
அரசு செயலாளர்.